தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1971 டிசம்பர் 9

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு **பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

வங்காள தேச அகதிகளுக்கு உதவி

** 186 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

வங்காள தேசத்திலிருந்து வரும் அகதிகளுக்கு உதவுவதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து பணம் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ் நாடு வங்காள தேச Bangla Desh) உதவிக் குழுவுக்கு முதலமைச்சர் துயர் தணிப்பு நிதியிலிருந்து, ரூ. 25,000 உதவித் தொகையாக 1—6—1971 அன்று வழங்கப்பட்டுள்ளது.

உதகையிலுள்ள 'தமிழகம்'

**** 187 வினா—திரு. சு. துரைசாமி:*** *மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

நீலகிரியில் (ஊட்டி) உள்ள 'தமிழகம்' விடுதியில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குவதற்குக் குறைந்த கட்டணம் வசூல் செய்யும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழக சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்கள் உதகமண்டலத்திலுள்ள 'தமிழகம்' விடுதியில் தமிழக அரசு அலுவல் காரணமாகத் தங்கும்போது அவர்களிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. அவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அரசு சார்பற்றவர்களிடம் வசூலிக்கப்பெறும் கட்டணத்திற்கு மாறாக மிதமான கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி: சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது குழுக் கூட்டங்களுக்குச் சென்றுவிட்டு ஒருநாள் இரண்டு நாள் தொடர்ந்து தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒரு நாளுக்கு